உ

கடவுள் துணை.

மதுரை N. S. பழூன் ஷண்முகம்

கிராம்போன் பிளேட்டில் பாடிவரும்

# புதிய பழூன் பாட்டுகள்.

(மூன்றும் பாகம்,)

Green Label Comic Records.

பிளேட் நே. N. 3207 { சென்னை இருபத்தைந்து / சென்னை ராஜகுட்டி

## காமிக் பாட்டு.

சென்னை இருபத்தைந்து ஜில்லாவிற்குள்ளே குட்டி
உன்னைப்போல ரூபவதி ஒருத்தருமில்லை அந்த
சிரித்த முகத்தை நோக்கு நல்ல
சீனி கற்கண்டு வாக்கு
ஒருத்தருமிந்த போக்கு
உடைத்த தில்லையோ நோக்கு
ஷோக்கு ஷோக்கு செ
கருத்ததுன் தலை முடியே நல்ல
காணும் சிற்றிடை கொடியே அடி
மணத்தமல்லிகைக் கொடியே என்மேல்
மனதுகொஞ்சம்வைத்து அழையே செ
பஞ்சவர்ணக் கிளியே யாரும்
கொஞ்சுகின்ற மொழியே இரு
பஞ்சமலரும் விழியே யாரும்
கருதும்நாகரீக விழியே செ

## N. 3207 டை பிளேட் பின்புறம்

காமிக் பாட்டு

### இராகம்-பியாக், தாளம்-சதுஸ்ரம்.

சென்னை ராஜகுட்டி என்
சீனிசர்க்கரை கட்டிவாடி என் செ

அன்னமே சீமாட்டி உனக்
கட்டிகை மயிர்மாட்டி உயர்
மின்னும் ஜப்பான் சீட்டி மேல்
பூட்டிக்கோடி பியூட்டி வாடி செ

உங்களப்பனைப் போய் கேட்டேன்
ஒப்பந்தம் வாங்கி போட்டேன்
தப்பவிட மாட்டேன் குட்டி
தாலிபண்ணி போட்டேன் வாடி செ

தஞ்சை ஷண்முக சாமி உன்
தனுக்குக் கேற்ற நேமி தமிழ்
செஞ்சொற் கூடற் பூமி இதில்
சேர்ந்தபாலு சாமி வாடி செ

2125
784.0954

---

பிளேட் நே. G. E. 4. { வாங்கவாங்கடி லவண்டிகளா. மானுருட்டும் கண்ணழகி.

## காமிக் பாட்டு.

### இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஏகம்.

வாங்க வாங்களடி லவண்டிகளா அந்த
வாத்தியார் சட்டாம்பிள்ளையை கண்டிங்களா அடி வா
போங்க போங்களடி பெண்டுகளா ஒரு
புருஷனுக்கு ஆசைபட்டு நின்றிங்களா அடி
புத்திக் கெட்டுத் தானே நீங்க
புறப்படுவ தேனோ
நித்தியமும் தானே
நிலைகுலைந்து மானே

---

ஸ்ரீ வடிவுடையம்மன் தாலாட்டு அணா 1. ஒவ்வொருவரும் அவசியம் படிக்கத் தக்கது.

நீலக் கருங்குயிலே நீயும் நானும் போகையிலே
நீயும் நானும் போகையிலே நிலாப் பிறக்கையிலே
சிதம்பரம் காலேயிலே
சிங்காரம் காணுதடி உங்களுக்கு ஜீவனங்குமிற்குதடி
செல்லு செல்லு திருச்சிநகர் செல்லு நீ
திருவாலூரு செல்லு
திருமதுரை செல்லு
சிரிப்பதெல்லாம் பல்லு மை
ஜிணிபட்டா ஜில்லு
ஜில்லு ஜில்லு ஜில்லு வா

---

G. E. 4. ஷி பிளேட் பின்புறம்.

## தெம்மாங்கு

அடி மானுருட்டும் கண்ணழகி
அடி அடி அடி அடியே என்
மணக்காட்டு பெண்ணழகி அடி
தேனருந்தும் கிளியழகி அடி
தேனருந்தும் கிளியழகி உங்கள்
சேதியெல்லாம் தெரியுமடி தெரியுமடி அடி
சிமுட்டுக் குட்டிகளா நீங்கள்
சீமையை உட்டிங்களா அடி
அமுட்டுக் காரிகளா ஊரில்
அலேயப் போரிங்களா

கையோடு கைகோர்த்து அடடடா
என் சாமி என் சாமி என்சாமி
காளேமாடு ரெண்டும் சேர்த்து
டுன் டுன் டுன் டுன் டுன் டுன் டுண்டு அடி
கையோடு கைகோர்த்து காளேமாடு ரெண்டும் சேர்த்து
அடி பையப் பைய நடந்துவாடி
பசப்புக்கார தளுக்கிகளா
பழமதுரையடி பெண்ணே பயப்படாதடி இங்கு
வலவிருக்குதடி பின்னே வாங்கடி ஓடி அடி
வலவிருக்குதடி பின்னே வாஙகடி ஓடி மா

---

Blue Label Tamil Comic Records.

மதுரை கள்ளப்பார்ட்.

## A. M. கார்மேக ஆச்சாரி பாடியது.

பிளேட் நெ. N. 3685. } அம்மாளு உங்கோம்மாளுக்கு கோலாஹலமான லீலைக்

காமிக் பாட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

அம்மாளு உங்கொம்மாளுக்கு
மருமகப் பிள்ளையடி தங்கம்
பிள்ளையடி சொந்த
மருமகண்டி
வெப்பாரும் ஒப்பாரும் மைத்துனண்டி
வெம்மாளும் ஓம்மாளும் நாத்தியடி
தப்பாது நானுனக்கு மச்சானடி
இப்போதே தாலியை கட்டுவேண்டி
கட்டு வெத்திலை தாரேண்டி
எட்டுபாக்குத் தாரேண்டி
டப்பி சுண்ணும்பு தாரேண்டி
போட்டுக் கூட வாயேண்டி
காமத்துடிக்காரி உன்னைத்தாண்டி
இனியுனக் கென்ன வேணுண்டி
மாமனைக் கேளடி
போடி உங்கொத் தாயார் சொன்னு நான்
பெரியமனுஷன் வீட்டு பிள்ளையல்லவா
உனக்கு மாமனல்லவா பல்
முதலில்லாத வியாபாரக் காரனிட மகனல்லவா அ

"தூக்குத் தூக்கி" டிராமா பார்க்கவும் விலை அணு 4.

நானே சிங்காரனடி
நானே ஒய்யாரனடி
நானே கெம்பீரனடி
நானே கார் மேகனடி
நாக்குலே மூக்குலே நத்துபுலாக்குலே
பேச்சு பொராக்குலே சொல் ஜோக்குலே
டாங்குடபர டோல் வயதில மடி
நல்லா பருத்திபட்டி
குட்டி நல்ல மருந்தடி
தேகம் மெலிந்து தேஜஸ குறைந்து
செல்வங் குறைந்த திங்கவே அ

---

## N. 3685-டி-பிளேட் பின்புறம்.

## காமிக் பாட்டு.

கோலாகலமான லீலக்கதிகாரியே
கொக்கோகக் கைகாரியே கோ
நாலாவித போகம் மேலாய் புரிந்திட
நானுன்னைத் தேடியே நங்கையே வந்தேண்டி கோ

தொகையரு

சந்தனமும் குங்குமமும் தனிப்புனுகும் ஜவ்வாதும்
அந்தமுடனே பூசி அழகான பஞ்சணைமேல்
எந்தனையே வந்தணைவாய் இந்த நல்ல நேரத்தில்
எனையணையே.

பாட்டு

செந்தமிழ் கார்மேகம் தமிழே உன்
செவியிற் கேட்டுமே மகிழே கோ

விருத்தம்

மானே உனக்கென்று நான்பட்டபாடு வருத்தமெல்லாம்
நானே எடுத்துரைக்க வென்றால் திங்கள் நான்கு செல்லும்
கானகம் பற்றும் கடல்நீறு வற்றும் கருங்கல் பெருகும்
ஏனோ என்மீதில் இத்தனை கோபம் என் ஏந்திழையே.

17547

---

## Orange Label Tamil Comic Records.

பிளேட் நெ. G.T. 8 { கண்ணாட்டி என் கட்டழகி / பரமசிவன் என்ன வரம்

### கோமாளி பாட்டு.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி

கண்ணாட்டியென் கட்டழகி
காதல் திரடி என்
கருத்து மாருதடி நல்ல
பொருத்தம் கோருதடி இது
ஆலம் நிலாக் காலம்—என்
கருத்துக் கனு கூலம் க

அமராவதி சொல்.

நீ நினைக்கிற நினைப்புக்கிது
நேரமல்லாவே ராஜா
நேரமல்லாவே மச்சான்
நேரமல்லாவே இந்த
நிலாகாலம் போகட்டும் புத்தி
சமாதான மாகட்டும்

கோமாளி சொல்.

அடி நங்கையே நீ வாராயா ஒரு
நல்லமுத்தம் தாராயா ஒரு
நல்லமுத்தம் தாராயா க

அமராவதி சொல்.

நாள்கிழமை நக்ஷத்திரம்
பார்க்க வேண்டாமா குறி
கேட்க வேண்டாமா பணம்
சேர்க்க வேண்டாமா நீ

கோமாளி சொல்.

அடி நாள்கிழமை நக்ஷத்திரம்
பார்த்து வந்தேனடி குறி

---

கெ. எ. மதுரை முதலியார் பதிப்பித்த "கோவிலன்" டிராமா விலை அணா 4.

கேட்டு வந்தேனடி பணம்
சேர்த்து வந்தேனடி அடி
மங்கையே நீ வாராயா ஒரு
நல்லமுத்தம் தாராயா ஒரு
நல்லமுத்தம் தாராயா ஒரு
நல்லமுத்தம் தாராயா க

---

G. T. 8-ஷி-பிளேட் பின்புறம்

காமிக் பாட்டு.

பரமசிவன் என்னவரம்
வேணுமென்று கேட்டாராம் கைலை
பரமசிவன் என்னவரம்
வேணுமென்று கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர் கேட்டாராம்
அவர் கேட்டாராம் ப

அவர் அரைபலம் கஞ்சா
வேணுமென்று சொன்னாராம் அவர்
சொன்னாராம் அவர் சொன்னாராம்
அவர் சொன்னாராம்
ஓ கணேசா ஓ கணேசா
ஜினுக் ஜினுக் ஜினுக் ப

பரமசிவம் என்னவரம்
வேணுமென்று கேட்டாரா அவர்
கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர்

---

K. A. மதுரை முதலியார் பதிப்பித்த பபூன் ஷண்முகம் ...டிய புதிய பபூன் பாட்டு 1-2-3-4 பாகம் எல்லாக் கடைகளிலும் ...டைக்கும்.

அரைப்பலம்கஞ்சா வேணுமென்று சொன்னாராம்
சம்போ சம்போ சபக்பல்
சம்போ சம்போ சம்போ ப
கைலைராஜா அந்த பரமசிவம்
என்னவரம் வேணுமென்று கேட்டாராம்
அவர் கேட்டாராம்
ஓ கணேசா ஓ கணேசா ப

மூன்றாம் பாகம் முற்றிற்று.

N. B. இதன் துடர்ச்சி நான்காம் பாகம் அவசியம் பார்க்கவும்.


# பதிவிரதா பூஷணம்.

இதில் தங்கள் தங்கள் கணவர்களுக்கு ஒத்துமையுள்ள மனைவி ஆவதற்கு தெரிந்துக்கொள்ள வேண்டிய அனேக நீதி விஷயங்களை கதை மூலியமாக இல்லற வாசிகளாயினோ அனுஷ்டிக்க வேண்டிய வற்றை விளக்கிக்காட்டும் ஒரு தருமநூல். ஆண்பெண் இருபாலர்க்கும் அத்யாவசியமாகிய இன்னூலானது கற்றோறேயன்றி மற்றோர்க்கும் பயன் படுமாறு சம்பாஷணை ரூபமாய் எழுதபபட்டுள்ளது.

இதன் விலை அணு 6.

நோய்க்கிடங் கொடேல்!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!!

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

**ஆயுள்வேத சிகிச்சா ரத்தினமேன்னும் குடும்ப வைத்தியம்.**

இப்புத்தகம் உள்ள குடும்பத்தில் வைத்தியர்களுக்கு இனி வேலையில்லை. இப்புத்தகத்தைப் படிப்போர் தங்களுக்குறும் வியாதிகளைத் தாங்களே தெரிந்து சிகிச்சை செய்துகொள்ளலாம். மிக அருமை வாய்ந்த நூல்! இதன் விலை ரூ. 1—8—0

**ஷண்முகானந்த புஸ்தகசாலை**, பார்க் டவுன், சென்னை.


மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.